அந்த டாக்டர்மீது விசாரணை செய்யப்பட்டு அந்த இடத்தில் இருந்து வேறு இடத்திற்கு அவர் மாற்றப்பட்டிருக்கிறுர். அவர்மீது தக்க நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

Pupils of Vadapathimangalam Elementary School

* 291 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state whether a number of pupils suffered from food poison in the Vadapathimangalam Elementary School in Thanjavur District around 4th February 1970 after consuming the Midday Meal?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நச்சுணவினுல் மாணவர் யாரும் பாதிக்கப்படவில்லை. எனினும் உணவில் பல்லி காணப்பட்டதாக மற்ருெரு மாணவன் கூச்சலிட்டதன் விளைவாக, இரு மாணவர்கள் வாந்தி எடுத்தனர். அவ்வுணவு முற்றிலும் தவிர்க்கப்பட்டதுடன் எச்சரிக்கையாக எல்லா மாணவர்களுக்கும் மருத்துவமனையில் இரைப்பை துப்புரவு (stomach wash) செய்யப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 292, 293, 294, 295, 296 பிறகு எடுத்துக் கொள்ளப்படும்.

கோழிப் பண்ணைகளில் புதிய ஆராய்ச்சி

* 297 **வினு.—திரு. எம். பூபதி :** மாண்புமிகு உணவு-வணிக வரித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு கோழிப்பண்ணைகளில் ஒவ்வொரு கோழியும் ஒரே நாளில் இரண்டு முட்டைகள் இடச்செய்யும் ஆராய்ச்சி நடத்தப்பட்டதா?

(இ) ஆம் எனில், இதில் வெற்றி ஏதேனும் கிட்டியதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) வினுவிற்கு இடமில்லை.

திரு. எம். பூபதி : நம்முடைய கோழிப் பண்ணைகள் நட்டத்தில் நடை பெறுவதாக மூடப்பட்டு வருகின்றனவே, ஆனுல் ருஷ்யா, சீனு போன்ற நாடுகளில் பகல் போலவே இரவு நேரங்களிலும் விளக்குகளைப் பகல்போலப் போட்டு ஒரு நாளைக்கு இரண்டு தடவை இ,ரவும்கூட கொழிகள் முட்டையிடச்செய்கிறுர்களே, நம் நாட்டிலும் அதைப்போல நம் மாநிலத்திலும் இரு முறை முட்டையிடும் முறையைக் கொண்டுவர அமைச்சர் தலைமையில் ஒரு குழுவைப்போட்டு வெளிநாடு சென்று அதைப் பரிசீலித்து வருவார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அது போன்ற தகவல் கிடையாது. குழு அமைக்கின்ற உத்தேசம் இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : நம் மாநிலத்தில் கோழிப் பண்ணைகள் மூடப்பட்டு வருகின்றன. அதற்காகக் கட்டப்பட்ட கட்டடங்கள் வீணுகக் கிடக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கோழி இரண்டு முட்டையிடுவதைப் பற்றிய கேள்வி.